செய்தி வெளியீடு எண்.437/2010 நாள்: 16.6.2010

வேலூர் மாவட்டம் மகேந்திரவாடி சிறப்பு மனுநீதி நாள் முகாமில் முதியோர் உதவித் தொகை கோரி வரப்பெற்ற மனுக்கள் முழுவதையும் அனுமதிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பேச்சு.

வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டம் மகேந்திரவாடி, கோடம்பாக்கம், உளியநல்லூர், கிராமங்களுக்கான சிறப்பு மனுநீதி நாள் முகாம் மகேந்திரவாடி கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எத்தனையோ திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார். உலகிலேயே இல்லாத திட்டம் 1ரூபாய்க்கு 1 கிலோ அரிசி திட்டம், முதியோர் உதவித்தொகை, கர்ப்பிணி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, ஏழை, பணக்காரருக்கு சமமாக மருத்துவ வசதி பெற கலைஞர் காப்பீட்டு திட்டம், குடிசை வீடுகளே இல்லாமல் கான்கீரிட் வீடுகளாக மாற்றும் திட்டம் கலைஞர் வீட்டுவசதி திட்டமாகும்.

சமுதாயத்தில் கஷ்டப்படும் ஏழை எளியோர் மனுக்களை அளிக்கும் போது பெறுகின்ற அரசு அலுவலர்கள் மனித நேயத்துடன் பெற்று உடன் பரிசீலிக்க வேண்டும். சட்டவிதிமுறைகளை கொண்டு உடன் தள்ளுபடி செய்யாமல் சூழ்நிலையை உணர்ந்து நல்லதை செய்ய வேண்டும். வேலூர் மக்கள் அமைதியான மக்களாக வாழ்ந்து வருகின்றார்கள். எவ்வளவு பிரச்சனை இருந்தாலும் மக்கள் போராடாமல் அமைதியுடன் கேட்கிறார்கள்.

குடிநீர் பிரச்சனையை தீர்க்க அரசு நிதியுதவியுடன் மாவட்ட நிர்வாகம் பல முயற்சிகளை மேற்கொண்டு குடிநீர் வழங்கி வருகிறது. குடிநீர் பிரச்சனைக்கு மழை பெய்தால் தான் நிரந்தர தீர்வாக இருக்கும்.

இம் முகாமை முன்னிட்டு முன்னதாக 184 மனுக்கள் பெறப்பட்டு 85 மனுக்கள் ஏற்கப்பட்டடு 58 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, 41 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. இன்று 178 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் முதியோர் உதவித் தொகை கோரி 62 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. முதியோர் உதவித்தொகை மனுக்கள் அனைத்தையும் அனுமதி அளிக்க முயற்சிக்க வேண்டும். சீரிய முறையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

அரசு திட்டங்களை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதுபோல கூட்டங்கள் நடத்தப்படுகின்றது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 107 பயனாளிகளுக்கு ரூ 7 லட்சத்து 30 ஆயிரத்திற்கான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

நெமிலி ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி.மணிமேகலை மனோகரன் வாழ்த்துரை ஆற்றினார். இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் திரு.வ.முகுந்தன் முன்னிலையாற்றினார். ஒன்றிய குழு உறுப்பினர் திரு.ரத்தினவேல், திருமதி வேண்டா நரசிம்மன், ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமதி.கலைமதி, திரு.கம்சன், திரு.பார்த்தசாரதி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார் தொகுத்து வழங்கினார்.

முன்னதாக அனைத்து துறை அலுவலர்கள் தங்கள் துறையின் சார்பில் வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகளை குறித்து திட்ட விளக்கவுரையாற்றினார்கள். அரக்கோணம் வட்டாட்சியர் திரு.அ.பழனிவேலு அனைவரையும் வரவேற்றார். வட்ட வழங்கல் அலுவலர் திரு.துரை நன்றி கூறினார்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.